# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 84/2016** **Date:12.08.2025**

**(PW1)- SreeMagesh**

**3**ம் பிரதிவாதிதரப்பு **குறுக்கு விசாரணை**

**1.** நான் ஒரு வழக்கறிஞர் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் அதிகார முகவர் என்ற முறையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். நான் எத்தனை வருடங்களாக வழக்கறிஞராக உள்ளேன் என்றால் 3 வருடங்களாக உள்ளேன். ஒரு அதிகார முகவர் சாட்சியமளிக்க கூடாது என்று உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதை மதுரை உயர்நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதியின் வீட்டில் அருகே எனது வீடு என்றால் சரிதான், அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.

**2.** 2ம் பிரதிவாதி வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்து பின் இறந்து விட்டார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி இறந்த பிறகு அவரது மகனை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லையென்றால் சரிதான், 2ம் பிரதிவாதி உயிருடன் இருந்த போதே ஒரு தலைப்பட்சமாக்கப்பட்டு விட்டார்.நான் கிரயம் பெற்ற ஆவணமான வாசாஆ. 1 ஆவணத்தில் முந்தைய ஆவணம் குறிப்பிட்டுள்ளதா என்றால் பட்டா ஆவணம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கான 25 வருட முந்தைய வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

**3.** தாவா சொத்தை பொறுத்து எனக்கு கிரயம் கொடுத்த நபர்கள் தாவா சொத்தை வேறோரு நபருக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்பது வில்லங்க சான்றிதழில் துலங்கும் என்றால் சரியல்ல. 08.09.2004 ம் ஆண்டு ராமசுப்பிரமணியும் துரைசாமியும் சேர்ந்து செந்தில் குமாருக்கு ஒரு ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், தேதி தெரியவில்லை. இதற்கு முன்பு ஒரு ஆவணம் 2ம்

பிரதிவாதியான செந்தில் குமாருக்கு எழுதி கொடுத்தது தெரிந்து தான் நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான், அவருக்கு கிரயம் கொடுத்தது போக மீதமுள்ள சொத்தை கிரயம் பெற்றுள்ளேன்.

**4.** வாசாஆ. 1 ஆவணத்தில் 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்தது போக மீதமுள்ள சொத்தை கிரயம் பெற்றுள்ள விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஏற்கனவே விலை கொடுத்தது போக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ. 1 ஆவணத்தில் ஏற்கனவே விலை கொடுத்தது போக என்று குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த சொத்தின் எல்கையை தான் நான் கிரயம் பெற்ற சொத்தின் எல்கையாக காட்டப்பட்டுள்ளது என்றால் 2ம் பிரதிவாதிக்குகிரயம் பெற்ற சொத்தின் எல்கையை பற்றி எனக்கு தெரியாது.

**5.** பட்டாவின் அடிப்படையில் சொத்தை கிரயம் பெற வேண்டுமென்றால் 01.04.2012 பின் கிரயம் பதியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து வேறொரு ஆவணம் இருப்பதை மறைத்து பொய்யான சங்கதிகளை இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்